Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C. 195/2025** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW1** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | தெட்சிணாமூர்த்தி |
| Father/Husband Name | : | லெட்சுமணன் |
| Village | : | பாரதிநகர், இராமநாதபுரம் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | கட்டிட பொறியாளர் |
| Religion | : | |
| Age | : | 58 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.12.2025.

<u>(எதிரிகள் ஆஜர்.)</u>

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது இராமநாதபுரம் பாரதிநகரில் வசித்து வருகிறேன். கட்டிட பொறியாளராக தொழில் செய்து வருகிறேன். சாட்சி ரவிகுலராமன் என் மனைவிக்கு தாய்மாமன். அவர் இறந்துவிட்டார். சாட்சி மீராஷா என்பவரை தெரியும். மற்ற சாட்சிகளை தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. S.C.NO.111/2007 வழக்கில் கண்ட எதிரிகளையும், மற்ற எதிரிகளையும் தெரியாது. இந்த எதிரிகள் மீது நான் புகார் கொடுக்கவில்லை. ரவிகுலராமன் புகார் கொடுத்தாரா என்பது தெரியாது. அவர் கொடுத்த புகார் சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை –

போலிஸ் விசாரணையில் கடந்த 10.10.1994ம் தேதி நானும், ரவிகுலராமன், பாண்டி ஆகியோர் ரவிகுலராமனுக்குசொந்தமான TN 65 7110 என்ற அம்பாசிடர் காரில்மீராசா என்பவர் அந்த காரை ஓட்ட விரால் பண்ணைக்கு சென்றுவிட்டு இரவு 09.45 மணியளவில் தேவிப்பட்டினம் அருகில் லெட்சுமி ஊரணி அருகில் வந்து கொண்டிருந்தபோது முன்னால் சென்று கொண்டிருந்த MPTC பேருந்தை 20 பேர் கொண்ட கும்பல் கல்லால் எறித்ததாகவும், அதை பார்த்த எங்கள் கார் டிரைவர் காரை பின்னால் எடுக்கும்போது கார் கவிழ்ந்து விட்டது என்றும், அப்போது அந்த கும்பலில் பின்னால் பெயர், விலாசம் கேட்டு தெரிந்த வெற்றிவேல், ராஜா, விஜயகுமார், நாகராஜன், சதீஸ், துரைராஜ், சேது, செல்வராஜ், மாரி, அழகர், பால்ராஜ், கோவிந்தராஜ், மாரிமுத்து, முருகேசன், மாரிமுத்து, இந்து முன்னனி இராமநாதபுரம் நகர தலைவர் நாகராஜன், ஞானம் ஆகியோர்கள் எங்கள் காரை சுற்றிக்கொண்டு அருவாள் பெட்ரோல் கேன், கல், கம்புடன் இருந்தார்கள் என்றும், அப்போது நாகராஜன்தன் கையில் இருந்த அருவாளுடன் வெட்டிக்கொள்ளுங்கடா என்று சொல்லி காரின் பின்சீட்டில் வலதுபக்கம் உட்கார்ந்து இருந்தவரை அருவாளால் ஓங்கிவெட்டி தலையில் பட்டு காயம் ஏற்பட்டது என்றும், உள்ளே இருந்த எங்களை விசாரித்தபோது நாங்கள் பயந்து ஓடிவிட்டோம் என்றும், பக்கத்தில் நின்ற மணி மகன் மோகன், கையில் வைத்திருந்த பெட்ரோல் கேனை திறந்து காரின்மேல் ஊற்றினார் என்றும், மாரிமுத்து கையில் வைத்திருந்த தீப்பெட்டியை வைத்து பற்றவைத்தான் என்றும், கார் தீப்பற்றி எரிந்தது என்றும், பின்னர் மேற்சொன்ன கும்பலில் இருந்த நபர்கள் ஓடிவிட்டார்கள் என்றும், காரின் உரிமையாளர் ரவிகுலராமன் மேற்சொன்ன நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்று கூறிவிட்டு தற்போது எனக்கு எதுவும் தெரியாது என எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.